**Spl.CC.No.80/2019**

**01-10-2021** ஆம் தேதி அன்று சாட்சி **P.W. 54 (**திருமதி**.**சண்முகபிரியா**)** அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

DSP அம்பிகாபதி சோதனையின்போது 43 ஆவணங்களை கைப்பற்றியுள்ளார் என்றால், சரிதான்.அந்த 43 ஆவணங்களில் எதிரிக்கு தொடர்புடைய ஆவணங்கள் என எத்தனை ஆவணங்களை எடுத்துக் கொண்டேன் என்றால், எதிரி எந்த, எந்த வங்கியில் கணக்கு வைத்திருந்தார் என்ற விவரங்கள் அந்த ஆவணங்களில் இருந்தன. அந்த விவரங்களை நான் எனது புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேன். மேற்கண்ட 43 ஆவணங்களிலிலும் எதிரியின் வங்கி கணக்கு குறித்த விவரங்கள் இருந்தனவா என்றால், வங்கி கணக்கு விவரங்களும் இருந்தன. மற்ற என்ன விவரங்கள் இருந்தன என்றால், எதிரியின் வருமான வரி துறை நிரந்தர கணக்கு எண் Pan Card குறித்த விவரங்கள், Debit Card குறித்த விவரங்கள், சொத்து குறித்த வில்லங்கச் சான்று, பட்டா, பாஸ்போர்ட் முதலிய விவரங்கள் சோதனையின்போது கைப்பற்றப்பட்டிருக்கிறது. 43 ஆவணங்களில் 28 ஆவணங்கள் வங்கி கணக்குகள் குறித்த ஆவணங்கள் ஆகும். அவைகளை நான் இவ்வழக்கின் புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேன். எதிரியின் கணக்கு விவரங்கள் அடங்கிய 28 ஆவணங்களும் வெவ்வேறு வங்கிகள் குறித்த ஆவணங்களும், ஒரே வங்கியில் எதிரியின் கணக்குகள் இருந்ததற்கான ஆவணங்களும் ஆகும். மேற்கண்ட 28 ஆவணங்களில் புலனாய்விற்கு தேவை என கருதிய ஆவணங்கள் தொடர்புடைய வங்கி அதிகாரிகளை நான் விசாரித்தேன். எதிரி திரு.பொங்களூர் பழனிசாமியின் பெயரில் இருந்த வங்கி கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் அவரது மனைவி பெயரில் இருந்த வங்கி கணக்குகள் தொடர்பான ஆவணங்களை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்

கொண்டேன். DSP ராமச்சந்திரன் அவர்கள் அவரது சோதனை மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கையில் 73 ஆவணங்களை கைப்பற்றியுள்ளார் என்றால், சரிதான். அந்த 73 ஆவணங்களில் எவ்வளவு ஆவணங்களை இவ்வழக்கின் புலனாய்விற்கு தேர்ந்தெடுத்தேன் என்றால், எதிரி திரு.பொங்குளூர் பழனிசாமி மற்றும் அவரது மனைவியின் பெயரில் இருந்த வங்கிக் கணக்கு விவரங்கள், எதிரி மற்றும் அவருடைய மனைவியின் பெயரில் இருந்த மேரீஸ் சிமெண்ட் கம்பெனியின் பங்குகள், எதிரி மற்றும் எதிரியின் மனைவியின் பெயரில் நீலகிரி சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் இருந்த பங்குகள் பற்றிய விவரங்கள், சௌத் ஈஸ்டர் செக்யூரிட்டீஸ் அண்ட் சர்வீசஸ் என்ற நிறுவனத்தில் எதிரி மற்றும் எதிரியின் மனைவி பெயரில் இருந்த பங்குகள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எனது புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேன்.

கேள்வி - 73 ஆவணங்களிலிருந்தும் மேற்கண்ட விவரங்களை நான் எடுத்தேனா?

பதில் - 73 ஆவணங்களிலிலும் எனக்கு கிடைத்த குளுவின் (Lead) அடிப்படையில் எடுத்தேன்.

மேற்கண்ட 73 ஆவணங்களில் எதிரி மற்றும் எதிரியின் மனைவி தவிர எதிரியின் குடும்பத்தார் பெயரிலான ஆவணங்களும் இருந்தன என்றால் சரிதான்.

DSP திரு.ரங்கராஜன் அவரது சோதனையின் பொழுது இரண்டு ஆவணங்களை கைப்பற்றியிருக்கிறார் என்றால், சரிதான். அந்த இரண்டு ஆவணங்களில் எந்த ஆவணத்தை நான் எனது புலனாய்விற்கு தேர்ந்தெடுத்தேன் என்றால், மேற்கண்ட இரண்டு ஆவணங்களையும் நான் எனது புலனாய்விற்கு தேர்ந்தெடுக்கவில்லை.

DSP சந்திரமௌளி அவர்கள் அவரது சோதனையின்போது 44 ஆவணங்களை கைப்பற்றியிருக்கிறார் என்றால், சரிதான். அந்த 44 ஆவணங்களில் நான் எத்தனை ஆவணங்களை இவ்வழக்கின் புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேன் என்றால், 44 ஆவணங்களிலும் எனக்கு கிடைத்த குளு (Lead) ஆகியவற்றை எடுத்துக் கொண்டேன்.

<u>கேள்வி</u> - 44 ஆவணங்களும் எதிரிக்கு சம்மந்தப்பட்டவைகள் என எனது புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேனா?

<u>பதில்</u> - 44 ஆவணங்களில், கலைஞர் கருணாநிதி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலிஜி சம்மந்தப்பட்ட ஆவணங்கள், வாகனங்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், விஜயலட்சுமி பழனிசாமி பொது அறக் கட்டளை தொடர்பான இருப்பு அறிக்கை ( Balance sheet)., திருமதி விஜயலட்சுமி பழனிசாமியின் பெயரில் இருந்த விற்பனை ஆவணம், எதிரியின் பெயரில் இருந்த விற்பனை ஆவணம் ஆகியவற்றை மட்டும் எனது புலனாய்விற்கு எடுத்துக் கொண்டேன்.

டி.எஸ்.பி திரு.நாச்சியப்பன் அவர்கள், அவரது சோதனையின்பொழுது 67 ஆவணங்களை கைப்பற்றியிருக்கிறார் என்றால், 65 ஆவணங்களைக் கைப்பற்றியிருக்கிறார். மேற்கண்ட 65 ஆவணங்களில் எதிரிக்கு சம்மந்தப்பட்டவைகள் என எத்தனை ஆவணங்களை எனது புலனாய்விற்கு தேர்ந்தெடுத்தேன் என்றால், மேற்கண்ட ஆவணங்களில் எதையும் எனது புலனாய்விற்கு தேர்ந்தெடுக்கவில்லை. அது திரு.பாலன் என்பவரது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையாகும்.

டி.எஸ்.பி முருகேசன் அவர்கள், அவரது சோதனையின் பொழுது இரண்டு ஆவணங்களை கைப்பற்றியிருக்கிறார் என்றால், சரிதான்.

(தற்பொழுது நேரம் மதியம் 1.45 மணி ஆகும். எனவே மதிய உணவு இடைவேளைக்காக சாட்சி விசாரணை நிறுத்தப்படுகிறது. மதியம் 2.30 மணிக்கு சாட்சி விசாரணை துவங்க உள்ளது)

<u>மாலை **3.20** மணி</u>

அந்த இரண்டு ஆவணங்களில் இவ்வழக்கின் புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டேனா என்றால், இல்லை. டி.எஸ்.பி அலிபாட்ஷா 33 ஆவணங்களை சோதனையின்பொழுது கைப்பற்றியிருக்கிறார் என்றால், சரிதான். அந்த 33 ஆவணங்களில் எந்த ஆவணங்களை இவ்வழக்கின் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால், எந்த ஆவணங்களையும் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த ஆவணங்களில் எதிரி சம்மந்தமாக எதுவும் தெரியவராததால் எடுத்துக்

கொள்ளவில்லை. எனது முதல் விசாரணையில் புலன் விசாரணைக்காக 94 ஆவணங்களை எடுத்துக் கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த 94 ஆவணங்கள் 7 டி.எஸ்.பிக்கள் சோதனையின்போது கைப்பற்றிய 264 ஆவணங்களிலிருந்து எடுத்துக் கொண்டேனா என்றால், வீட்டுச் சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விவரங்களின் அடிப்படையில் நான் புலனாய்வில் சேகரித்த ஆவணங்களே அந்த 94 ஆவணங்கள் ஆகும். அந்த 94 ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், ஆம், தாக்கல் செய்திருக்கிறேன். சோதனையின்போது 7 டி.எஸ்.பி க்களும் பார்வை மகசர் தயார் செய்திருக்கிறார்களா என்றால், தயார் செய்யவில்லை, சோதனை நடவடிக்கைகள் (Proceedings) மற்றும் மாதிரி வரைபடம்தான் தயார் செய்துள்ளார்கள். சோதனை மேற்கொண்டதாகச் சொல்லும் டி.எஸ்.பிக்கள் மற்றும் சோதனையின் போது இருந்ததாகச் சொல்லும் சான்றுரைஞர்கள் (சாட்சிகள்) எனது விசாரணையில் சோதனையின்பொழுது பார்வை மகசர் தயாரித்ததாக சொல்லியுள்ளார்களா என்றால், ஆம், சொல்லியுள்ளார்கள். சோதனை நடவடிக்கையிலேயே சோதனையின்பொழுது பார்வையிட்டதை எழுதியுள்ளார்கள். தனியாக பார்வை மகசர் தயாரித்து இருக்கிறார்களா என்றால், தனியாக தயாரிக்கவில்லை. சோதனை மேற்கொண்டதாகச் சொல்லும் 7 டி.எஸ்.பி க்களும் சோதனையின்போது சோதனை செய்யும் இடம் குறித்து வரைபடம் தயாரித்தார்களா என்றால், தயாரித்துள்ளார்கள், அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் அவ்வாறு சோதனையின்பொழுது சோதனை செய்யப்படும் இடம் குறித்து வரைபடம் தயார் செய்யவில்லை என்பதால்தான் அந்த வரைபடங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. Ex.P.113 எதிரிக்கு 7.5.2012 ஆம் தேதி அன்று நான் அனுப்பிய இறுதி வாய்ப்பு நோட்டீஸ் ( Final Opportunity to account for disproportion) என்றால் சரிதான். Ex.P.113-க்கு முன்பாக எதிரியிடம் சொத்துக்கள் குறித்து விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா

என்றால், இல்லை. Ex.P.113-ல் எதிரியின் வருமானத்திற்கு அதிகமான சொத்தாக ரூ.55,01,652.19 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். Ex.P.113-ல் வருமானத்திற்கு அதிகமான சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள தொகை மதிப்பானது முதல் தகவல் அறிக்கையில் (Ex.P.108) குறிப்பிட்டுள்ள ரூ.37,08,092/- என மாறுபாடாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். புலன் விசாரணையின் துவக்கத்தில் மேற்கண்ட ரூ.37,08,092/- என குறிப்பிட்டுள்ளேன். இறுதி வாய்ப்பு அறிவிப்பின்பொழுது எதிரி வருமானத்திற்கு அதிகமாக கொண்டிருக்கும் சொத்தின் மதிப்பு ரூ.55,01,652.19 என ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் Ex.P108 எதிரியின் வருமானத்திற்கு அதிகமான சொத்து மதிப்பு ரூ.37,08,092/- எனக் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால், சரிதான். இறுதி வாய்ப்பு அறிவிப்பில் 7 அட்டவணைகள் (Statement) உள்ளன என்றால் சரிதான். Ex.P.113 -ல் கண்டுள்ள Statement -I ல், 13.5.2006 ஆம் தேதியில் beginning of Check period ல் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார்களின் சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். Statement -II ல், at the end of the check period as on 31.03.2010 ல் எதிரி மற்றும் அவரது குடும்பத்தாரின் சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். Statement-III ல், 13.5.2006 முதல் 31.3.2010 வரையிலான Check period ல் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார்களின் வருமானம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். Statement-IV ல், 13.5.2006 முதல் 31.3.2010 வரையிலான Check period-ல் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார்களின் செலவினங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். Ex.P.113 ல் Basic statement என குறிப்பிட்டு, அதற்கு அடுத்து Statement-V, Statement -VI, Statement -VII என குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். Statement-V ல் Assets of the accused at the end of the check period என ஒரு தொகையையும், Assets of the accused at the beginning of the check period என

ஒரு தொகையையும், Assets acquired by the accused during the check period என தொகையையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். கணக்கீடு செய்து குறிப்பிட்டுள்ளேன். Statement-VI ல் Income of the accused and his family members during the check period என்று ஒரு தொகையையும், Expenditure of the accused and his family members during the check period எனறு ஒரு தொகையையும், Likely savings of the accused and his family during the check period என்று ஒரு தொகையையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். Statement III லிருந்து Statement -Iv ஐக் கழித்து Statement – VI ஆன Likely savings ஐ கணக்கிட்டுள்ளேன். Statement – VII, Value of the assets acquired during the check period என்று ஒரு தொகையையும், Likely savings of the accused and his family during check period என்று ஒரு தொகையையும் காண்பித்துள்ளேன் என்றால்,சரிதான். Statement -V லிருந்து Statement -VI ஐக் கழித்து Statement -VII ஆன வருமானத்திற்கு அதிகமான சொத்தாக கணக்கிட்டு காண்பித்துள்ளேன். Statement -1 ல் அயிட்டம் நெம்பர் IV ஆக, the Accused has purchased a house Plot measuring 2800 sq.feet in S.F.No.198/2 part of Sowripalayam village, Coimbatore Taluk for Rs.1 lakh in the name of his wife Tmt.P.Vijayalakshmi on 24-09-1989 vide document No.3924/1989 of joint No.1, SRO, Coimbatore என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தை எதிரி அவரது மனைவி பெயரில் கிரையம் பெற்றதாக கிரைய ஆவணத்தில் கண்டுள்ளதா என்றால், அவ்வாறு இல்லை. எதிரியின் மனைவியின் பெயரில் அந்த ஆவணம் உள்ளது. அதேபோல் அயிட்டம் எண்கள்.V, VI, VIII, IX, X, XI, XIV, XV, XXVIII, XXIX, XXX ஆகிய சொத்துக்கள் எதிரி அவரது மனைவியின் பெயரில் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், மேற்கண்ட சொத்துக்கள் குறித்து எதிரியின் மனைவியின் பெயரில்தான் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எதிரி வாங்கியதாக மேற்கண்ட

சொத்துக்கள் குறித்த ஆவணங்களில் காணப்படவில்லை என்றால், சரிதான். எதிரியின் மனைவி பெயரில் ஆவணங்கள் உள்ளது. Statement -1 ல் அயிட்டம் V, VI, VII, VIII, IX, X, XI, XII, XIII, XIV, XV, XVII, XVIII, XX, XXI, XXII, XXIV, XXV, XXVIII, XXIX, XXX, ஆகிய சொத்துக்களின் ஆவணங்கள் பதிவின்பொழுது செலுத்திய பதிவுக் கட்டணம் எவ்வளவு என்பது பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மேலே சொல்லியுள்ள Item Nos.V, VI, VII, VIII, IX, X, XI, XII, XIII, XIV, XVII, XVIII, XX, XXI, XXII, XXIV, XXV, XXVIII, XXIX, XXX சொத்துக்கள் கிரையம் வாங்கும்பொழுது அதன் பதிவுக் கட்டணத்தை சொத்தை விற்பனை செய்தவரே (Seller ) செலுத்தியுள்ளார். Ex.P.113 அறிவிப்பில் விற்பனை செய்பவரே மேற்கண்ட சொத்துக்கான பதிவு கட்டணத்தை செலுத்தியுள்ளார்ள என சொல்லவில்லை என்றால், சரிதான். ஆவணங்களில் குறிப்பாக குறிப்பிடப்பட்டிருந்ததால் அது குறித்து தனியாக நான் சொல்லவில்லை. விற்பனையாளரே பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என மேற்கண்ட சொத்துக்கான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் நான் சொல்லியுள்ளேன். Statement No.I ல் சொல்லியுள்ள சொத்துக்களுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருக்கிறோமா என்றால், ஆம் தாக்கல் செய்திருக்கிறோம். அந்த ஆவணங்களைப் பார்த்தால் யார் பதிவு கட்டணம் கட்டியுள்ளார்கள் என்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான். Statement -I முதல் Statement -VII ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள் தவறான கணக்குகள் என்றால், சரியல்ல. Statement -1 ல் அயிட்டம் XXVII ல் சொத்தின் மதிப்பு ரூ.13,000/- என சொல்லப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். Statement -I ல், Item XXXVI ல், எதிரி அவரது பெயரில் மாருதி 800 கார் பதிவு எண்.TN.37-AA-0919, என்ற காரை 14.5.2002 தேதியில் ஸ்ரீ சாரதாம்பாள் ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனியிலிருந்து ரூ.2,59,655/-ற்கு வாங்கியதாக குறிப்பிட்டு அதற்கான கடன்

தொகையை எதிரி 2005 ஆம் வருடம் மே மாதத்தில் வட்டி ரூ.35,415/- உடன் சேர்த்து ரூ.2,59,655/-ஐயும் செலுத்தியுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

<u>கேள்வி</u> - எதிரி, 2006 ஆம் வருடம் தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்யும்பொழுது 80 கிராம் எடையுள்ள தங்க ஆபரணங்கள் ரூ.25,000/- மதிப்புள்ளதும் மற்றும் அருணா தியேட்டர் கேப்பிட்டல் இன்வெஷ்ட்மெண்ட் ரூ.1,47,562/- என்று குறிப்பிட்டுள்ளதாக Statement-I ல் Item XXXVII, XXXVIII ல் குறிப்பிட்டுள்ளீர்கள், அதை உறுதி செய்வதற்காக என்ன ஆவணங்களை நீவீர் பரிசீலனை செய்தீர்கள்?

<u>பதில்</u> - எதிரி, Ex.P.90 ஆவணத்தில் 2006-ஆம் வருடத்தில் தேர்தல் ஆணையத்தில் கொடுத்த Self Declaration-ல் சொல்லப்பட்டிருந்ததால் அது குறித்து வேறு ஆவணங்கள் எதையும் பார்த்து அதை உறுதிபடுத்தவில்லை.

மேற்கண்ட இரண்டு விவரங்களையும், ஆவணங்கள் அடிப்படையில் உறுதிபடுத்தாமல் Statement – I-ல் தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. 2006-ஆம் வருடத்தில் எந்த மாதத்தில், எந்த தேதியில் மேற்கண்ட நகைகள் மற்றும் முதலீடுகள் செய்யப்பட்டது என்று உறுதிபடுத்த எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். எதிரி, தேர்தல் வேட்பு மனுவில் உறுதிமொழி ஆவணத்தின் வழி சொல்லியுள்ளதால் தனியாக ஆவணங்களை கொண்டு உறுதிசெய்யவில்லை. Statement-I-ல் Item XL, shares held by Tmt.Late. P.Vijayalakshmi w/o. Thiru. N.Palanisamy in Maris Cements Rs.75,000/- எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். Item XLII-ல் Shares held by Tmt.Late.P.Vijayalakshmi w/o.Thiru. N.Palanisamy in Nilgris Cements Rs.2,66,000/- எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். Item XLVII-ல் எதிரியின் மனைவி திருமதி. P. விஜயலட்சுமியின் சேமிப்பு கணக்கான 10869252480 என்ற கணக்கில் (SBI, PB Division, Coimbatore) இருப்புத் தொகையாக 12-01-2006-ல் ரூ.1,75,561.97 உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். Item XLIX-ல் எதிரியின் மனைவி

திருமதி.P.விஜயலட்சுமி மற்றும் எதிரியின் தகப்பனார் திரு.நாச்சிமுத்து ஆகியோர்களது சேமிப்பு கணக்கான 0310053000000028 என்ற



கணக்கில் (சௌத் இந்தியன் வங்கி, ஆர்.எஸ்.புரம் கிளை) 13-05-2006-ல் ரூ.28,474.10 இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ( இந்நிலையில் மாலை 5.30 மணி ஆகி விட்டது. சாட்சி அவசரமாக விமான மூலம் சென்னை செல்லவேண்டியிருப்பதால் குறுக்கு விசாரணைக்கென 23.10.2021 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/சண்முகபிரியா,

ஒம்/ஆர்.சக்திவேல்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.